**02.04.2025**

**DVOP 01/2023 மனுதாரர். ஜெயந்தி, க/பெ. சக்கரவர்த்தி ரமணி சங்கர்**

**மனுதாரர் ஆஜர் சத்யப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>1ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனக்கும் , எதிர் மனுதாரருக்கும் 20.08.2015ம் தேதி திருமணம் நடந்தது என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னிட்டு நானும், எதிர் மனுதாரரும் செப்டம்பர் 2015 முதல் ஏப்ரல் 2016 வரை உடுமலைப்பேட்டையில் தனிக்குடித்தனம் இருந்தோம் என்றால் சரிதான். திருமணத்தின் போது எதிர் மனுதாரரின் தாயார் 15 பவுன் நகை எனக்கு அணிவித்தனர் என்று சொன்னால் சரியல்ல. தாலிக்கொடி 5 பவுன் மட்டுமே திருமணத்தின் போது கொடுத்தனர். 2016 முதல் சொந்தமாக எனது பெற்றோருடன் டீ கடை வைக்க வற்புறுத்தி வந்தீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 10.04.2016முதல் 20.09.2016 வரை பழனியில் தனிக்குடித்தனம் இருந்தோம் என்று சொன்னால் சரிதான். 2016ல் LIC முகவராக செயல்பட திண்டுக்கல்லில் ஒரு மாதம் பயிற்சி எடுத்து அதன் மூலம் LIC முகவராக செயல்பட்டு வந்தார் என்றால் சரியல்ல. 2016ல் பழனியில் வசித்த போது எனக்கும், எதிர் மனுதாரருக்கும் பிரச்சனை ஏற்பட்டு அது முதல் தனித்தனியாக வசித்து வருகிறோம் என்றால் சரிதான். எனக்கும், எதிர் மனுதாரருக்கும் ஏற்பட்ட சண்டையில் எலக்ட்ரிக் ஷாக் கொடுத்து அதனால் ஒரு வாரம் உள்நோயாளியாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார் என்று சொன்னால் சரியல்ல. 2016க்கு பின்னிட்டு இருவரும் தனித்தனியே தான் வசித்து வருகிறோம் என்று சொன்னால் சரிதான். 2016ல் செல்லப்பாண்டி என்ற இருவருக்கும் பொதுவான உறவினர் பைசல் செய்து பைசலின் சேர்ந்து வாழ அறிவுறுத்தப்பட்டும் அதன்படி நான் 1ம் எதிர் மனுதாரருடன் சேர்ந்து வாழ வில்லை என்று சொன்னால் சரியல்ல. செல்லப்பாண்டி என்பவர் செய்த பஞ்சாயத்திற்கு பின்னிட்டு ஒரு வாரம் சேர்ந்து வாழவில்லை என்று சொன்னால் சரியல்ல. கடந்த ஜுலை 2017ல் பழனி பெரியநாயகியம்மன் கோவிலில் வைத்து லோகு, பாப்பம்பட்டியை சேர்ந்த முத்துக்குமார்,அவர் மனைவி ஈஸ்வரி , புவனா, தங்க லோகநாதன் ஆகியோர் பஞ்சாயத்து செய்தனர் என்று சொன்னால் சரிதான். மேற்படி பைசலில் நான் யோசித்து முடிவு சொல்கிறேன் என்று கூறினேன். ஆனால் அதற்கு பின்னிட்டு சேர்ந்து

வாழவில்லை என்று சொன்னால் சரிதான். எதிர் மனுதாரர் இருவரும் சேர்ந்து வாழ கோரி பழனி சார்பு நீதிமன்றத்தில் H.M.O.P .NO. 110/2020 மனு தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரிதான். மேற்படி மனுவில் 05.04.2022 வரை நான் எனது தரப்பில் எதிர் வாத உரை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி வழக்கில் எனது தரப்பில் வழக்கறிஞர் காளிதாஸ் என்பவர் ஆஜர் ஆகினார் என்று சொன்னால் சரிதான். 05.04.2022ம் தேதி H.M.O.P .NO. 110/2020 மனு தள்ளுபடி செய்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு நானும்,எனது சகோதரர் சிவக்குமார் மற்றும் எனது வழக்கறிஞர் ஆகியோர் எதிர் மனுதாரரின் வழக்கறிஞர் அலுவலகத்தில் சமரசம் பேசி மேற்படி H.M.O.P .NO. 110/2020 மனுவை வாப்பஸ் பெற்றுக்கொண்டு இருவரும் சேர்ந்து மனம் ஒத்து மனமுறிவு கோரி (Divorce by Mutual consent ) மனு தாக்கல் செய்து கொள்ள வேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் H.M.O.P .NO. 110/2020 மனு தள்ளுபடிக்கு விடப்பட்டது என்று சொன்னால் சரிதான். நான் எதிர்மனுதாரர் மற்றும் இரு தரப்பு வழக்கறிஞர்கள் சேர்ந்து 01.04.2022ம் தேதி சம்மதப்பத்திரம் ஏற்படுத்திக்கொண்டோம் என்று சொன்னால் சரிதான். நானும் , எனது வழக்கறிஞரும் மேற்படி சம்மத பத்திரத்தில் எதிர் மனுதாரரின் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து கையெழுத்து செய்தேன். நான் பத்தாம் வகுப்பு படித்துள்ளேன். மேற்படி பத்திரத்தை நான் படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன். நான் என்னுடைய நகை 5 ½ பவுன் இருக்கும் விசயத்தை எனது வழக்கறிஞர் மற்றும் எதிர் மனுதாரர் தரப்பு வழக்கறிஞரிடம் மேற்படி H.M.O.P .NO. 110/2020 மனு வாப்பஸ் பெறும் வரை சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய நகை 5 ½ பவுன் மற்றும் சீர்வரிசை பொருட்கள் எதிர் மனுதாரர் வசம் இருப்பது சம்பந்தமாக 05.04.2022ல் வழக்கு வாபஸ் பெறும் வரை நீதிமன்றத்திலோ, காவல் துறையிலோ புகார் கொடுத்து பொருட்களை பெற நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி மனு வாபஸ் பெற்ற பின்பு தான் காவல் துறையில் முதல் முறையாக எதிர் மனுதாரருக்கு எதிராக என்னுடைய நகை 5 ½ பவுன் இருப்பது சம்பந்தமாக புகார் அளித்தேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி புகாரின் பேரில் இருவரையும் அழைத்து காவல்துறையினர் சமரசம் பேசி வெளியே பேசி நீதிமன்றத்தின் மூலம் தீர்வு காணும் படி சொன்னார்கள். அதன்பின்னிட்டு 10.05.2022ம் தேதி மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான். அதன்

அடிப்படையில் 23.05.2022ம் தேதி பழனி காவல் துறை துணைக்கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருதரப்பினரையும் வைத்து சமரசம் பேசினர். மேற்படி புகாரின் பேரில் காவல் துறை கண்காணிப்பாளர் அவர்கள் நகை, பொருட்களை வீட்டில் போய் பெற்று கொள்ளும் படி கூறினார்கள். நீதிமன்றத்தில் மூலம் நடவடிக்கை எடுக்க சொல்லி மட்டுமே கூறினார்கள் என்று சொன்னால் சரியல்ல. 31.05.2022ம் தேதி பாப்பம்பட்டியில் உள்ள எதிர் மனுதாரரின் சித்தப்பா வீட்டில் வைத்து பொருள்களை எடுத்து கொள்ளும்படி கூறியதன் பேரில் அங்கு சென்றோம். மேற்படி தேதியில் எதிர் மனுதாரர்கள் அனைவரும் அங்கிருந்தனர். எதிர் மனுதாரரின் தாயாருக்கு சுமார் 70 வயதிருக்கும் அவர் சர்க்கரை, பிரசர் மற்றும் நரம்புத்தளர்ச்சி நோயினால் கடந்த 10 வருடங்களாக சிகிச்சை பெற்று வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. நான் அவர்களுடன் வசிக்கும் போது எந்த நோயும் இல்லை. 31.05.2022ம் தேதி 5ம் எதிர் மனுதாரர் வீட்டிற்கு நான் செல்லவில்லை என்றும் , நான் மனுவில் குறிப்பிட்டது போல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றும் அங்கு 1 முதல் 5 எதிர் மனுதாரர்கள் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிர் மனுதாரர்களை வைத்து பணம் பறிக்கும் நோக்கத்தில் பின்னிட்டு சமூக நலத்துறையில் மனு கொடுத்து இந்த மனுவை மேல் நடத்தி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. 5 ½ நகை எனக்கு அணிவித்தது சம்பந்தமாக நான் அளித்த புகாரிலோ, சமூக நலத்துறை அலுவலகத்தில் கொடுத்து தற்சமயம் நடத்தி வரும் இந்த மனுவிலோ குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள எனது தரப்பு ஆவணத்திலோ நான் தாக்கல் செய்துள்ள மனுவிலோ, நான் கொடுத்த வாக்குமூலத்திலோ 5 ½ பவுன் நகை என்னவென்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 2016ல் நான் எதிர் மனுதாரரை விட்டு பிரிந்த சமயத்திலேயே எனது நகை மற்றும் பொருட்களை எடுத்து சென்று விட்டேன் என்றும், மனுவிற்காக 5 ½ பவுன் நகை இருப்பதாக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. அதன் பொருட்டு தான் நான் சம்மத பத்திரத்திலும் முழு சம்மதத்தோடு கையொப்பம் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. என்னை எதிர் மனுதாரர்கள் ஒரு போதும் தரக்குறைவாக பேசவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர் மனுதாரர் என்னை குடித்துவிட்டு அடித்து பிரச்சனை செய்வதாக பொய்யாக கூறினேன் என்று சொன்னால் சரியல்ல. நான் பொய்யான சங்கதிகளை கூறி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றும் மனுவில்

கூறியுள்ளது போல் 5 ½ பவுன் நகை எதிர் மனுதாரர் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர் மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ மீண்டும் பழனி கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் H.M.O.P மனு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள 15 இலட்சம் இழப்பீடு எனக்கு கிடைக்க தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர் மனுதாரர் ஒருபோதும் வன் கொடுமை செய்யவில்லை என்றும் நான் மனுவில் கூறியுள்ளது போல் 1ம் எதிர் மனுதாரர் எவ்வித இழப்பீடும் தரவேண்டிய அவசியமில்லை என்றும் நான் தான் 1ம் எதிர் மனுதாரரை புறக்கணித்து வாழ்ந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

K R KALAIVANAN Digitally signed by K R KALAIVANAN Date: 2025.04.02 17:46:36 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி